**முதிர்விற்குப் பின்னரும் தொடரும் இறப்புக் காப்புடன் கூடிய பணமீட்புத் த**

எல்.ஐ.சி. தனது பொன் விழா ஆண்டின் தொடர்ச்சியாக பல சிறந்த அம்சங்களைக் கொண்ட இத்திட்டத்தினை வழங்கியுள்ளது. மிகக் குறைந்த பிரீமியத்தில் அதிக பாதுகாப்பு. குறித்த காலத்தில் ரொக்கம். பிரீமியம் கட்டத் தவறினாலும் குறிப்பிட்ட காலத்திற்கு தொடரும் இறப்புக்காப்பு மற்றும் முதிர்விற்குப் பின்னரும் தொடரும் இறப்புக் காப்பு எனும் சிறிய சிறப்புக்கள் அமைந்துள்ளன.

**இறப்புக் காப்பு**

பாலிசிதாரர் பாலிசி தவணைக் காலத்தில் துரதிஷ்ட வசமாக இறக்க நேர்ந்தால் உடனடியாக காப்புத் தொகை வழங்கப்படுகிறது. வாழ்வுகாலப் பயன்கள் ஏதேனும் வழங்கப் பெற்றிருந்தாலும் அவை இத்தொகையிலிருந்து குறைக்கப் படமாட்டா.

**இறப்புக் காப்பு - முதிர்விற்குப் பின்னரும் தொடர்கிற**

பாலிசி முதிர்வடைந்த பின்னரும் பாலிசி திட்டவரையில் அரை பகுதி ஆண்டுகள் வரை இறப்புக்காப்பு தொடர்ந்து கிட்டுகிறது. காப்பு பாலிசி காப்புத் தொகையில் 50 சதம் வரை வழங்கப்படும். இச் சலுகைக்கு கூடுதல் பிரீமியம் செலுத்தத் தேவையில்லை.

**விபத்துப் பாதுகாப்பு மற்றும் திறனிழப்பு பாதுகா**

மிகக்குறைந்த தொகையை பிரீமியத்துடன் சேர்த்து கட்டுவதன் மூலம் இச்சலுகையை பாலிசிதாரர் பெறலாம். இதன் மூலம் பாலிசி நடப்பு காலத்தில் பாலிசிதாரர் விபத்தினால் இறக்க நேர்ந்தால் ஒரு கூடுதல் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. இச்சலுகை பெற அதிக பட்ச உச்ச வரம்பு வயது 70 ஆகும். இவ்விபத்துப் பாதுகாப்பு தொகை மற்ற பாலிசிகளில் பெறப்பட்ட விபத்துக் காப்பை பொறுத்து அமையு

அவ்வாறு அல்லாமல் விபத்தின் காரணமாக திறனிழப்பு ஏற்படுமாயின் ஒரு காப்பீட்டுத் தொகையை 10 வருடத்திற்கு மாதத்தவணையாக பிரித்து வழங்கப்படுகிறது. அத்துடன் திறனிழப்பு ஏற்பட்ட தேதியிலிருந்து பிரீமிய விலக்கும் வழங்கப்படுகிறது. விபத்துக் காப்பு பெறுகிறவர்களுக்கு மட்டுமே இது

**இத்திட்டத்தில் அமைந்துள்ள கூடுதல் சிறப்புச் சலுகை**

இத் திட்டத்தில் இரண்டு ஆண்டு பிரீமியம் செலுத்திய பின்னர் மேற்கொண்டு செலுத்த வேண்டிய பிரீமியங்கள் செலுத்த தவறினாலும், இறப்புப் பாதுகாப்பு தொடர்ந்து வழங்கப்படுகிறது.

இது இக் காப்பீட்டுத் திட்டத்தில் அமைந்துள்ள கூடுதல் சலுகையாகும்.

**பணத்திற்கு முழு பாதுகாப்பு**

நாம் முதலீடு செய்கின்ற பணம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமாயின் அது பாதுகாப்பானோர் கைகளில் இருக்க வேண்டியது அவசியமாகிறது. அந்த வகையில் எல்.ஐ.சி.யில் முதலீடு செய்கின்ற தொகை நேர்மையான நிர்வாகம் தெளிவான முதலீட்டுக் கொள்கை என பல்வேறு சிறப்புகளைக் கொண்ட நிர்வாகத்தின் வசம் இருக்கிறது.

**பற்றுறுதிக்கான கூடுதல் தொகை**

இத்திட்டத்தின் எதிர்கால அனுபவங்களை கருத்தில் கொண்டு, பற்றுறுதிக்கான கூடுதல் தொகையினை எல்.ஐ.சி அறிவிக்கும். அவ்வாறு அறிவிக்கப் படின், அவை திட்ட முதிர்வின் போது சேர்த்து வழங்கப்படுப

**வருமான வரி சலுகைகள்**

**Section 80(C) of IT Act.**

மேற்கூறிய வருமானவரி விதியின் படி காப்பீட்டுக்காக கட்டப்படும் பிரீமியத்தொகைக்கு வருமான வரி விலக்களிக்கப்படுகிறது. நிகர வருவாயில் இப்பாலிசிக்கான பிரீமியத்தொகை நேரடியாக குறைக்கப்படுகிறது. இச்சலுகைக்கான அதிக பட்சமாக உச்ச வரம்பு 1,00,000 ஆகும்.

இந்த சலுகை பாலிசிதாரரின் பெயரிலுள்ள பாலிசிகளுக்கு மட்டுமல்லாமல், மனைவி மற்றும் பிள்ளைகளின் பாலிசிகளுக்கும் பொருந்தும். (மணமான மகள்களின் பெயரில் உள்ள பாலிசிகளும் இதில் சேரும்)

**Section 10(10D) of IT Act.**

வாழ்வு காலப் பயன்கள், முதிர்வுத்தொகை அல்லது இடையில் இறப்பு நேர்ந்தால் வழங்கப்படும் இறப்புச் காப்புத் தொகை இவை அனைத்திற்குமே வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அந்த தொகைக்கு வருமானவரி செலுத்த தேவையில்லை. இது காப்புத் திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு சலுகையாகும்.

**கடன் வசதி**

மூன்று வருடங்களுக்கு மேல் பிரீமியம் செலுத்திய பின்னா் மிகக்குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெறலாம். கடன் பெறுவதற்கான விதிமுறைகள் மிக விரைவாகவும் சுலபமாகவும் பெறும் வண்ணம் வடிவமைக்கப் பட்டுள்ளன..

**ஒப்புவித்தல்**

மூன்று வருடங்களுக்கு மேல் பிரீமியம் செலுத்திய பின்னா் திட்டத்திலிருந்து விலகிக் கொள்ளலாம். ஆனால் அப்படி விலகும் போது அதுவரை காப்பளித்ததற்கான தொகை குறைக்கப்படும்.

**15 நாட்களுக்குள் திரும்பப் பெறும் வாய்ப்பு**

இத்திட்டத்தில் சேர்ந்த பின்னா். இதில் குறிப்பிடப்பட்ட பயன்கள் மற்றும் விதிமுறைகள் எவையேனும் ஏற்புடையதாக இல்லையெனில், 15 நாட்களுக்குள் இத்திட்டத்திலிருந்து வெளியேற வாய்ப்பும் உண்டு.

இந்த அறிக்கை, இத்திட்டத்தின் பயன்களை தாங்களுக்கு முழுமையாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற நோக்கம் கொண்டது. அதிக படியான அல்லது சட்டரீதியான விளக்கங்கள் பெற பாலிசி பத்திரம் ஒன்றையே ஆதாரமாகக் கொள்ள வேண்டும்.